இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 31.01.2026

# ஒன்றிய அரசு மீண்டும் பாராட்டுகிறது!

தமிழ்நாட்டுக்கான தொழில் முதலீடு வேறு மாநிலங்களுக்குச் செல்வதாக ஆளுநர் ரவி கூறி வரும் நிலையில் ஒன்றிய அரசின் ஆய்வறிக்கையில்தமிழ்நாட்டுக்குஏராளமானபாராட்டுகள்கிடைத்துள்ளன.

'பொருளாதார ஆய்வறிக்கை 2025-26' என்ற ஆய்வு அறிக்கையை ஒன்றிய அரசு நேற்றைய தினம் வெளியிட்டுள்ளது. பிப்ரவரி 1 ஆம் தேதியன்று ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை வெளியாக இருக்கிறது. அதற்கு முன் பொருளாதார ஆய்வறிக்கையை ஒன்றிய அரசு வெளியிடுவது வழக்கம். இந்த அறிக்கையை நேற்றைய தினம் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இந்தியாவை ஒவ்வொரு துறைரீதியாகப் பிரித்து அதன் நிலைமைகளை இந்த ஆய்வறிக்கை சொல்கிறது.

இந்த அறிக்கையின்படி, நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 7.4 சதவிகிதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த இந்தியாவுக்கான ஆய்வறிக்கையாக அது இருந்தாலும் தமிழ்நாட்டை, தமிழ்நாட்டின் செயல்பாட்டை, அதன் வளர்ச்சியை ஒன்றிய ஆய்வறிக்கை பல்வேறு இடங்களில் பாராட்டி இருக்கிறது.

★ இந்தியாவின் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானா, மராட்டியம் போன்ற மாநிலங்கள் 40 விழுக்காடு பங்கு வகிக்கின்றன.

★ அதிநவீன தொழில்நுட்பம், ஐ.டி., நிதி போன்ற துறைகளின் வளர்ச்சி தென் மாநிலங்களில் அதிகளவில் உள்ளது.

★ புதிதாகத் தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் நடவடிக்கையை தமிழ்நாடு மேம்படுத்தி உள்ளது.

★ தொழில் ஊக்குவிப்பை ஒற்றைச் சாளர அனுமதி, ஆன்லைன் அனுமதி, நிலச் சீர்திருத்தம் சாத்தியப்படுத்தி உள்ளது.

★ சூரிய மின் உற்பத்திப் பூங்கா, மாவட்ட அளவிலான கார்பன் குறைப்புத் திட்டங்களில் சிறப்பான தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ மின்நுகர்வு குறைப்புத் திட்டங்களிலும் தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கை சிறப்பாக எடுக்கப்பட்டுள்ளது.

★ உற்பத்தித் துறை வேலைவாய்ப்பில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

★ **நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தித் துறை வேலைவாய்ப்பில் சுமார் 15 விழுக்காடு பங்களிப்புடன், தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாக இந்த அறிக்கை பாராட்டு தெரிவித்துள்ளது. உற்பத்தித் துறை வேலைவாய்ப்பில் குஜராத் 13 விழுக்காடும், மகாராஷ்டிரா 13 விழுக்காடும், உத்தரதப் பிரதேசம் 8 விழுக்காடும், கர்நாடகா 6 விழுக்காடும் உள்ளன.**

★ இந்தியாவில் ஆலைத் தொழிலாளர்களில் 60 விழுக்காட்டினர் தமிழ்நாடு உட்பட 7 மாநிலங்களில் உள்ளனர்.

★ நாட்டில் பெரும் தொழிற்சாலைகள் அதிகம் உள்ள முதல் 8 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

★ **நாட்டுக்கே முன்னோடியாக தமிழ்நாட்டின் 'தோழி' விடுதிகள் உள்ளன. பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கி வேலைவாய்ப்பைப் பெருக்க தமிழ்நாட்டின் 'தோழி விடுதி' திட்டம் சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது. பெண்களின் வேலைவாய்ப்பைப் பெருக்க நினைக்கும் மாநிலங்களுக்கு தமிழ்நாடு அரசின் 'தோழி விடுதி' திட்டம் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.**

★ பெண்கள் வேலைவாய்ப்பைப் பெருக்கும் திட்டங்களை தீட்ட தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக உள்ளது.

- இவ்வாறு பல்வேறு இடங்களில் தமிழ்நாட்டைப் பாராட்டி இருக்கிறது ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள பொருளாதார அறிக்கை.

உற்பத்தித் துறை வேலை வாய்ப்பு தான் இதில் மிகமிக முக்கியமானது. அதில் நாட்டின் ஒட்டுமொத்த வேலை வாய்ப்பில் தமிழ்நாடு 15 விழுக்காடு பங்களிப்பைத் தந்து முதலிடத்தை வகிப்பது தான் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியது ஆகும். பல்வேறு நெருக்கடிகள் மிகுந்த சூழலில் இந்தச் சாதனை எட்டப்பட்டுள்ளது.

**பொருளாதார ஆய்வறிக்கை என்பது இந்தியப் பொருளாதாரத்தின் தற்போதைய நிலை பற்றி மட்டுமல்ல, எதிர்கால வளர்ச்சியின் போக்கையும் கணிக்கக் கூடியதாக இருக்கும். அந்த வகையில் தமிழ்நாட்டின் வளர்ச்சி யானது அனைத்து வகையிலும் முன்னோக்கிய பாய்ச்சலை நிகழ்த்தி வருவதை ஒன்றிய அரசின் பொருளாதார அறிக்கை ஒப்புக் கொண்டுள்ளது.**

இந்த ஆண்டு மட்டுமல்ல, கடந்த ஆண்டும் இதே போன்ற ஆய்வறிக்கையை ஒன்றிய அரசு வெளியிட்டது. 31.1.2025 அன்று 2024-25ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை அப்போது முன் வைக்கப்பட்டது. அந்த அறிக்கையிலும் தமிழ்நாடு அரசு பாராட்டப்பட்டது.

★ இந்தியாவின் தோல்பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்தியில் 38விழுக்காடுபங்களிப்பும்இந்தியாவின்மொத்ததோல்பொருள்கள் ஏற்றுமதியில் 47 விழுக்காடு பங்களிப்பையும் தமிழ்நாடு வழங்கி யுள்ளது. இது பெண்களுக்கானவேலைவாய்ப்பைவளர்த்துள்ளது.

★ தமிழ்நாட்டில் முதலீட்டாளர்களின் தேவைக்கு ஏற்ப வழங்கப்படும் ஊக்கத் தொகை முறை, மூலதன மானியங்கள், ஊதிய மானியங்கள் மற்றும் நில விலை மானியங்கள் போன்றவற்றை தமிழ்நாடு அரசு சிறப்பாக வழங்கி வருகிறது.

★ தமிழ்நாட்டின் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தை ஒரு புதுமையான முயற்சி. தரமான கல்வி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. இதற்குக் காரணம் பள்ளிக் கல்வித் துறையால் கொண்டுவரப்படும் பல்வேறு திட்டங்கள் ஆகும்.

- இவை மூன்றும் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் தரப்பட்ட பாராட்டு ஆகும். இதே போன்ற பாராட்டுத் தான் இந்த ஆண்டு அறிக்கையிலும் தமிழ்நாடு அரசுக்கு கிடைத்துள்ளது.

**சிறப்புத் திட்டங்கள் தராமல், நிதி தராமல் இருந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒப்புக் கொண்டு அறிக்கையில் மறக்காமல் குறிப்பிடும் ஒன்றிய அரசுக்கு நன்றி தெரிவிக்கத்தான் வேண்டும்.**



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 79வது நினைவு நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.1.2026) சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகள் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், தாயகம் கவி, பிரபாகரராஜா, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




உத்தமர் காந்தியடிகளின் நினைவு நாளான தியாகிகள் நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (30.1.2026) சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், தாயகம் கவி, பிரபாகரராஜா, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

## சிவகங்கை மாவட்டத்தில் இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

# ரூ. 205 கோடியில் 15,453 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்!

## சட்டக்கல்லூரி வேளாண் கல்லூரி புதிய கட்டிடங்கள் – டைட்டல் பார்க் திறந்து வைக்கிறார்!

*சிவகங்கை. ஜன. 31-* முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த இரண்டு நாட்களாக சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்று 30ஆம் தேதி சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வந்த முதல்வர் அவர்கள் கார் மூலம் திருப்பத்தூருக்கு வருகை தந்தார். நேற்று மாலை 5 மணி அளவில் திருப்பத்தூரில் அண்ணா சிலை முன்பாக மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் தலைமையில் முதல்வருக்கு உற்சாகமான சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதை தொடர்ந்து நேற்று முதல்வர் அவர்கள் முதல் நிகழ்ச்சியாக திருப்பத்தூர் வட்டம் சிராவயலில் அண்ணல் காந்தியடிகள் கம்யூனிச இயக்கத்தின் முதுபெரும் தலைவர் ஜீவா ஆகியோர் சந்தித்த இடமான சிராவயலில் மணி மண்டபத்தினை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து குன்றக்குடியில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு விழா நிறைவினை அரசு சார்பில் நடைபெறும் என்று அறிவித்ததை முன்னிட்டு குன்றக்குடி நினைவிடத்தில் அமைந்துள்ள அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதை தொடர்ந்து காரைக்குடியில் ரூபாய் 50 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள வீறு கவியரசர் முடியரசனார் நினைவு மண்டபம் மற்றும் சிலைகளை திறந்து வைத்தார். இரவு காரைக்குடியில் தங்கினார். இன்று 31ஆம் தேதி சனிக்கிழமை காலை 9 மணி அளவில் ரூபாய் 100 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய சட்டக் கல்லூரி கட்டிடம், ரூபாய் 32 கோடியில் மினி டைட்டல் பார்க் கட்டிடத்தை திறந்து வைத்தும் கானாடு காத்தான் செட்டிநாட்டில் ரூபாய் 25 கோடி யே60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வேளாண்மை கல்லூரி கட்டடத்தினை திறந்து வைக்கிறார்.

மேலும் ரூபாய் 13 கோடியே 36 லட்சத்தில் முடிவற்ற முப்பது 29 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் ரூபாய் 205 கோடியே 6 லட்சத்தில் 15,453 பயனாளிக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரை உரையாற்றுகிறார். அதன் பின்னர் காரைக்குடியில் இருந்து கார் மூலம் மதுரை செல்கிறார். நேற்று 30ஆம் தேதி சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட முதல்வரை வகையில் மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட எல்கையான எஸ்.எஸ். கோட்டையில் இருந்து காரைக்குடி வரை சாலையின் இருபுறமும் சுமார் 100 கிலோ மீட்டர் தூரத்தில் கழகவண்ணக் கொடிகளாலும் வண்ண மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேலும் முதல்வரை வரவேற்று பொதுமக்கள் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகள் கழக நிர்வாகிகள் பதாகைகளை ஏந்தி வரவேற்றார்கள்.

முதல்வரை வரவேற்கும் வகையில் கிராமிய நடனம், தாரை, தப்பட்டை, நாதஸ்வர இன்னிசை முழங்க கிராமிய கலைஞர்கள் பாடல் பாடி முதல்வருக்கு உற்சாகமான வரவேற்பு அளித்தார்கள். இந்த வரவேற்பு ஏற்பாடு நிகழ்ச்சிகளை மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணி நிர்வாகிகள் சிறப்பான முறையில் செய்திருந்தார்கள். நேற்றைய வரவேற்பு நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. கழக செய்தி தொடர்பு துணைத்தலைவர் மருது அழகுராஜ், முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, நகர் கழக செயலாளர்கள் பெரிபாலா, க.பொன்னுச்சாமி, சி.எம்.துரை. ஆனந்த், துணை மேயர் நா. குணசேகரன் ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.சண்முகவடிவேல், விராமதி மாணிக்கம், கே. பாலசுப்பிரமணியன், பூமணி, குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், சுப. சின்னத்துரை, கே.ஆர்.ஆனந்த், நாகனிரவி, வே.பூபாலசிங்கம்வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன், லெ.மு.ரவிச்சந்திரன், ஆர். எம்.கென்னடி, வே. ஆரோக்கியசாமி, யோக. கிருஷ்ண குமார், எம் .ஜெயராமன், திருமலை முத்து ராமலிங்கம், பெ.மந்த காளை, மா . அண்ணாதுரை, துரை.ராஜா மணி, அ.முத்துச்சாமி, அறு. செல்வராஜன், கா.வெங்கட்ராமன், வே .தமிழ்மாறன், பி.செல்வராஜ் திருமதி வசந்தி சேங்கை மாறன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தா.ராமையா, அ.முகம்மது, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ந.அம்பல முத்து, த.உதயகுமார், பி.டி. ஆர்.முத்து கரு. அசோகன், பி.ஆர்.பெருமாள், சிங்காரம், பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.கார்த்திகேயன், ராசு, நாகூர் கனி, ஜெயராமன்பகுருதீன் அலி, பி.ஏ.நஜ்மூதின், துணைத்தலைவர் இந்தியன் செந்தில், மாவட்ட இளைஞர் அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்திருமதி ஹேமலதா செந்தில், மகளிரணி நிர்வாகிகள் மார்க் ரெட்கமலா, திலகவதி கண்ணன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய் மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் முருகா னந்தம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், முன்னாள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தா.இரா.நெடுஞ்செழியன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து , மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்த மங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து ,பேருராட்சி மன்ற தலைவர்கள் திருமதி கோகிலா ராணி நாராயணன், ராதிகா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கள் சேதுபதி ராஜா, பரணிகிட்டு, எஸ். எம்.மதிவாணன், மகா வீர்,கார்த்தி, மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் சிவக்குமார், விவசாய அணி காளிமுத்து, பொருளாளர் ஏ.எம்.கண்ணன், சேவியர், சொ.கண்ணன், ஒட்டுனர் ரமேஷ், மானாமதுரை நகர் மன்ற தலைவர் துணைத்தலைவர் பாலா சுந்தர், ஒன்றிய துணைச் செயலாளர் கள் எஸ். முத்துக்குமார், சிவபுரி சேகர், புதூர் கண்ணன், புகழேந்தி, குடோன்மணி, மனோகரன், அன்புசெல்வன் இலக்கிய அணி அழகையா, ரவிச்சந்திரன், உதய சண்முகம், சுப.தமிழரசன், தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் உற்சாகமாக வரவேற்றார்கள். முதல்வரை கழக அரசின் சாதனைகள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி வரவேற்றார்கள். முதல்வரின் வருகையை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் விழாக்கோலம் ஏற்பட்டுள்ளது.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.1.2026) சென்னை அசோக் நகர் தகைசால் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 11.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 தளங்களில் 40 கூடுதல் வகுப்பறைகளுடன் கட்டப்பட்ட புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் த. வேலு, ஜெ.கருணாநிதி, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, பள்ளிக் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பி. சந்தரமோகன், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்க கல்வி இயக்குநர் முனைவர் பூ.அ. நரேஷ் உள்பட அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் உடனிருந்தனர்.